அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 292

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
26 மே, 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்.

நடுத்தர தொழினுட்ப இணைந்த சேவை பிரமாணக்
குறிப்பினைச் செயற்படுத்துதல்

31.10.1978 ஆம் திகதியையும் 276-ஆம் இலக்கத்தையும் கொண்டதும் 13.08.1979 ஆம் திகதியையும் 326-ஆம் இலக்கத்தையும் கொண்டதும் 16.11.1981 ஆம் திகதியையும் 377-ஆம் இலக்கத்தையும் கொண்டதுமான தாபனச் சுற்று நிருபங்களைக் கவனிக்கவும்.

02. நடுத்தரத் தொழினுட்ப இணைந்த சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்ட திணைக்கள ரீதியான பரீட்சைகளும் 326-ஆம் இலக்கத் தாபனச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையும் ஒரே பரீட்சையெனத் தவறாகக் கருதப்பட்டுள்ளதென்பது இந்த அமைச்சுக்குத் தொடர்ந்து கிடைத்து வரும் கடிதங்களிலிருந்து தெரியவந்துள்ளது. ஆகவே நடுத்தர தொழினுட்ப இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான திணைக்களப் பரீட்சைகளும் வினைத் திறமைகாண் தடைப்பரீட்சைகளும் சம்பந்தப்பட்ட வரையில் பின்வரும் முறையில் நடந்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறது.

02.01 திணைக்களப் பரீட்சைகள்

2.1.1 111-ஆம் வகுப்பிலிருந்து 11-ஆம் வகுப்பு 'ஆ' பிரிவுக்கும் 11-ஆம் வகுப்பு 'ஆ' பிரிவிலிருந்து 11-ஆம் வகுப்பு 'அ' பிரிவுக்கும் பதவி உயர்த்துவதற்கு முன் முறையே 1-ஆம், 2-ஆம் திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டும். இந்தத் திணைக்களப் பரீட்சைகளில் எழுத்துமூல வினாத்தாள் ஒன்றையும், செய்முறை பரீட்சை ஒன்றினையும் கட்டாயமாகச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இத் திணைக்களப் பரீட்சைகளுக்குரிய பரீட்சை நடைமுறைகளை உரிய அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்புத் திட்டத்தையும் பதவியுயர்வு திட்டத்தையும் இணைத்து தாபனப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும். இந்த திணைக்களப் பரீட்சைகளை நடத்தும் பொழுது 397-ஆம் இலக்கத் தாபனச் சுற்றறிக்கையின் (2)-ஆம் பந்தியிலுள்ள அறிவுறுத்துரைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

2.1.2 முதலாவது திணைக்களப் பரீட்சையில் சித்தியடையாதவர்களெனினும் 111-ஆம் வகுப்பில் 12 வருட திருப்திகரமான சேவை

யைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இருக்கும் வெற்றி டங்களில் 10 வீதத்துக்கு மேற்படாதவாறு 11-ஆம் வகுப்பு "ஆ" பிரிவுக்குப் பதவியுயர்த்தலாம்.

2:1:3 தொழினுட்பவியலில் தேசிய டிப்ளோமா பட்டத்தையோ கனிஷ்ட தொழினுட்ப உத்தியோகத்தர்களுக்குரிய சான்றிதழையோ கொண்டிருக்கும் உத்தியோகத்தர்கள் இரண்டாம் திணைக்களப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

2:1:4 இரண்டாம் திணைக்களப் பரீட்சையின் பாடத்திட்டத்தில் பதவிக்குரிய துறைசார்ந்த விடயங்களுடன் தாபனக் கோவையின் ஏற்பாடுகள் பற்றியதும் நிதிப் பிரமாணங்கள் பற்றியதுமான அறிவைப் பரீட்சிக்கும் முகமாகக் கீழ்க் காணும் விடயங்களையும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

(அ) அலுவலக நடைமுறைகளும் தாபனக் கோவையும்

| | | |
|---|---|---|
| தா.கோ அத்தியாயம் | 11 | - ஆட்சேர்ப்பு நடைமுறைகளும் நியமிப்புகளும் |
| அத்தியாயம் | X | - மேலதிக நேரமும் விடுமுறைகளும் விடுமுறைச் சம்பளமும் |
| அத்தியாயம் | XII | - லீவு |
| அத்தியாமம் | XIII | - புகைவண்டி ஆணைச் சீட்டுக்கள் |
| அத்தியாயம் | XIV | - கடமைப் பொருட்டு உள்நாட்டிற் பிரயாணம் |
| அத்தியாயம் | XVI | - அரசாங்கம் பணியாளர் மீது கொண்டுள்ள உரிமைகள் |
| அத்தியாயம் | XVII | - விடுமுறைப் பிரயாணம் |
| அத்தியாயம் | XIX | - உத்தியோக வதிவிடங்கள் |
| அத்தியாயம் | XXXIX | - நிருவாக நடைமுறைகளும் செயல் முறைகளும் |
| அத்தியாயம் | XLVII | - சாதாரண நடத்தையும் ஒழுக்கமும் |

(ஆ) கணக்கும் நிதிப் பிரமாணங்களும்

1. திரட்டிய நிதி
2. வருடாந்த மதிப்பீடு
3. வருடாந்த கணக்கு மாற்றம்
4. கணக்கீட்டு உத்தியோகத்தர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த

. இறைவரி கணக்கீட்டு உத்தியோகத்தர்
அதிகாரமளித்தல், அங்கீகரித்தல்
கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல்

பணிகளை ஒப்படைத்தல்
நட்டங்களும் தள்ளுபடிகளும்
அரசாங்க நிதிகளை பாதுகாத்தல் பெறுதல், வழங்குதல் சம்பந்தமான நடைமுறைகள்

யைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களை இருக்கும் வெற்றி டங்களில் 10 வீதத்துக்கு மேற்படாதவாறு 11-ஆம் வகுப்பு "ஆ" பிரிவுக்குப் பதவியுயர்த்தலாம்.

1:3 தொழினுட்பவியலில் தேசிய டிப்ளோமா பட்டத்தையோ கனிஷ்ட தொழினுட்ப உத்தியோகத்தர்களுக்குரிய சான்றிதழையோ கொண் டிருக்கும் உத்தியோகத்தர்கள் இரண்டாம் திணைக்களப் பரீட்சையி லிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

1:4 இரண்டாம் திணைக்களப் பரீட்சையின் பாடத்திட்டத்தில் பதவிக்குரிய துறைசார்ந்த விடயங்களுடன் தாபனக் கோவையின் ஏற்பாடுகள் பற்றியதும் நிதிப் பிரமாணங்கள் பற்றியதுமான அறிவைப் பரீட்சிக்கும் முகமாகக் கீழ்க் காணும் விடயங்களையும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

அ) அலுவலக நடைமுறைகளும் தாபனக் கோவையும்

| | |
|---|---|
| தா.கோ அத்தியாயம் 11 | - ஆட்சேர்ப்பு நடைமுறைகளும் நியமிப்புகளும் |
| அத்தியாயம் X | - மேலதிக நேரமும் விடுமுறைகளும் விடுமுறைச் சம்பளமும் |
| அத்தியாயம் XII | - லீவு |
| அத்தியாயம் XIII | - புகைவண்டி ஆணைச் சீட்டுக்கள் |
| அத்தியாயம் XIV | - கடமைப் பொருட்டு உள்நாட்டிற் பிரயாணம் |
| அத்தியாயம் XVI | - அரசாங்கம் பணியாளர் மீது கொண்டுள்ள உரிமைகள் |
| அத்தியாயம் XVII | - விடுமுறைப் பிரயாணம் |
| அத்தியாயம் XIX | - உத்தியோக வதிவிடங்கள் |
| அத்தியாயம் XXXIX | - நிருவாக நடைமுறைகளும் செயல் முறைகளும் |
| அத்தியாயம் XLVII | - சாதாரண நடத்தையும் ஒழுக்கமும் |

(ஆ) கணக்கும் நிதிப் பிரமாணங்களும்

1. திரட்டிய நிதி
2. வருடாந்த மதிப்பீடு
3. வருடாந்த கணக்கு மாற்றம்
4. கணக்கீட்டு உத்தியோகத்தர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
   . இறைவரி கணக்கீட்டு உத்தியோகத்தர்

அதிகாரமளித்தல், அங்கீகரித்தல்

கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல்

பணிகளை ஒப்படைத்தல்

நட்டங்களும் தள்ளுபடிகளும்

அரசாங்க நிதிகளை பாதுகாத்தல் பெறுதல், வழங்குதல் சம்பந்தமான நடைமுறைகள்

..6

மறுத்த காசோலைகள்
கொடுப்பனவு பற்றிய நடைமுறைகள்

5. அரசாங்க நிதிப் பாதுகாவல்
அளவைச் சபை
மேலதிகப் பற்று
வங்கிக் கணக்குகள்

6. வேலைகளும் சேவையும்-கட்டிட நிர்மாணத் திணைக்களம்

7. பண்டசாலைப் பொருள்களைச் சரிபார்த்தல் பொறுப்பேற்றல், பெறுதல் வழங்குதல் என்பன சம்பந்தமான நடைமுறைகள்.

8. ஒப்பந்தங்கள்-கேள்வி முறைக்கு புறம்பானவை

03. விளைத்திறமை காண் தடை

111-ஆம் வகுப்பில் சம்பள அளவுத் திட்டத்தின் ரூ.9600/-என்னும் சம்பளப் படிநிலையும் 11-ஆம் வகுப்பு "ஆ" பிரிவின் சம்பள அளவுத் திட்டத்தின் ரூ.10860/-என்னும் சம்பளப் படி நிலையையும் கடப்பதற்கு முன் சித்தியடைய வேண்டிய விளைத்திறமைகாண் பரீட்சைகளைத் தாண்டிச் செல்வதற்கு குறிப்பிட்டதொரு உத்தியோகத்தரின் வேலையும் நடத்தையும் பற்றிய சான்றிதழின் பேரில் இடமளிக்கலாம் என அமைச்சின் செயலாளர் ஒருவர் கருதினால் தாபனப் பணிப்பாளரின் சம்மதத்துடன் அவ்வாறு செய்யலாம். குறிப்பிட்டதொரு உத்தியோகத்தர் விளைத்திறமை காண் தடையைக் கடப்பதால் அல்லது அதில் சித்தியடைவதன் மூலம் விளைத்திறமை காண் தடைக்கப்பால் உள்ளதொரு சம்பளத்தைப் பெறத் தகுதியுடையவராகிறார். என்றும் இதனால் உயர் வகுப்புக்கோ தரத்துக்கோ பதவி உயர்த்தப்படுதற்குத் தகுதியுடையவராகார்.

04. எந்த உத்தியோகத்தருக்கும் அவரது வயது அடிப்படையில் விளைத்திறமை காண் தடைப் பரீட்சையிலிருந்தோ திணைக்களப் பரீட்சைகளிலிருந்தோ விலக்களிக்கப்படமாட்டாது. எனவே இத்தகைய கோரிக்கைகளை இந்த அமைச்சுக்கு விடுத்தலாகாது.

ஒப்பம்: எம்.என். ஜுனைட்
தாபனப் பணிப்பாளர்